# தி.மு.க. முப்பெரும் விழா - 2025 (கரூர்) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## திருமிகு. கனிமொழி கருணாநிதி

### பெரியார் விருது



**பெ**ரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை எந்தவித சமரசமும் இன்றி கொள்கைப் பிடிப்போடும் நெஞ்சுரத்தோடும் என்றும் கடைப்பிடித்து வருபவர். தலைவர் கலைஞர் அவர்களே ஒருமுறை “எங்கள் வீட்டில் எல்லோரும் தி.மு.க., கனிமொழி மட்டுமே தி.க.” என்று கூறுமளவிற்கு பெரியார் மீதும் அவரது கொள்கைகள் மீதும் பற்றுக் கொண்டவர்.

கழகம் அறிவிக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் களத்தில் முன்நின்று பங்கேற்பவர். சட்டமன்ற நாடாளுமன்ற மற்றும் இடைத்தேர்தல்களில் தமிழகமெங்கும் பல ஆயிரம் மைல்கள் பயணித்துத் தேர்தல் பிரச்சாரக் களப்பணி ஆற்றி வருபவர்.

பட்டியலின மற்றும் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படும்போது, அவர்களுக்காக எப்போதும் குரல் கொடுத்து வருபவர். தேசியப் பல்கலைக் கழகங்களில் பட்டியலின மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளுமளவிற்கு தள்ளப்படுவதை கண்டித்து நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியிருக்கிறார்.

கல்வி, மாநில உரிமைகள், சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நாடாளுமன்றத்திலும் பிற தளங்களிலும் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர். சமரசமற்ற பெண்ணியவாதியான அவர் பாலின சமத்துவத்தை தொடர்ந்து வலியுறுத்துவதுடன் பெண்களுக்கெதிரான குற்றங்களைக் களையவும் தொடர்ந்து குரலெழுப்பி வருகிறார். பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் வகையில் ‘போக்சோ சட்ட’த்தில் சட்டத்திருத்தம் கொண்டுவர தொடர்ந்து முயன்று வருகிறார்.

பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் பலமுறை உரத்துக் குரல் எழுப்பியதுடன் 2017 மார்ச் 20 அன்று ஆயிரக்கணக்கான கழக மகளிர் அணியினருடன் புதுதில்லி ஜந்தர்மந்தரில் தேசிய அளவில் பல முக்கியத் தலைவர்கள் பங்கேற்ற மாபெரும் கண்டனப் பேரணியை நடத்தினார்.

2007 முதல் 2019 வரை இருமுறை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக சிறப்பான பங்களிப்பு செய்துள்ளார். 2019 முதல் தூத்துக்குடி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக தொகுதி மக்களுக்காகவும் தமிழர் நலன், மாநில உரிமைகள் மற்றும் மொழி உரிமை காக்கவும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

“ஆப்ரேஷன் சிந்தூர்” தொடர்பாக இந்திய அரசால் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஒரு குழுவிற்குத் தலைவராக ரஷ்யா, ஸ்பெயின் உள்ளிட்ட ஆறு நாடுகளுக்குச் சென்று ஒன்றுபட்ட இந்தியாவின் முகமாக நமது நாட்டின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கினார்.

தற்போது அவர் ‘நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவராக உள்ளார்.

அழிவின் விளிம்பில் இருந்த நமது பாரம்பரியக் கலைகளை மீட்டெடுக்கும் முயற்சியாக ‘சென்னை சங்கமம்’ கலைத் திருவிழாவை நடத்துவதில் முக்கியப் பங்காற்றி வருகிறார்.

‘தி இந்து’ அலுவலகம் மற்றும் தேசிய பத்திரிகை ஊழியர் சங்கத்தின் தலைவராக தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இச்சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவர்.

‘கருவறை வாசனை’, ‘பார்வைகள்’, ‘அகத்திணை’, ‘கறுக்கும் மருதாணி’, ‘சிகரங்களில் உறைகிறது காலம்’ ஆகிய நூல்களை எழுதியுள்ள படைப்பாளி இவர்.

உள்ளூர் இலக்கியம் முதல் உலக இலக்கியம் வரை பரந்துபட்ட வாசிப்பு அனுபவம் கொண்டவர்.

திருமிகு கனிமொழி கருணாநிதி அவர்களின் கழகப் பணியையும் சமூகப் பணியையும் பாராட்டி, தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“பெரியார் விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

கரூர்
17.09.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திரு. சோ.மா. ராமச்சந்திரன்

### கலைஞர் விருது



**தி**ருவண்ணாமலை மாவட்டம், சோழம்பட்டு கிராமத்தில் திரு.மாசிலாமணி, திருமதி எல்லம்மாள் தம்பதியருக்கு மகனாக 15.5.1926ஆம் ஆண்டு பிறந்தவர் சோ.மா.ராமச்சந்திரன்.

தன்னுடைய 16 வயதிலேயே திராவிடர் கழகத்தின்மீது ஈடுபாடு கொண்டு உறுப்பினராகச் சேர முயன்றவர். பின்னர், சில ஆண்டுகளுக்குப் பிறகு எஸ்.ஐ.ஏ.ஏ.திடலில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் கலந்து கொண்டு, பின்னர் கழக உறுப்பினர் ஆனார். அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பேசியதைக் கேட்டு மனமுருகிய சோ.மா.ராமச்சந்திரன் தீவிர கழகச் செயற்பாட்டாளராக மாறினார்.

1976ஆம் ஆண்டு அவசரநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஒரே அறையில் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தார். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

பகுதிக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் பொறுப்பு வகித்தவர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்கள்.

1984ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் தமது சட்டமன்ற பதவியை விட்டு விலகிய பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தலில் அண்ணா நகர் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “சோ.மா. என்றால் சோதனையிலும் மாறாத ராமச்சந்திரன்” என்று இவரை பாராட்டினார். தொடர்ந்து, மறுமுறையும் இவரை சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து வெற்றிபெறச் செய்தார் கலைஞர்.

பின்னர் பேராசிரியர் அவர்கள் அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டபோதும், அதனைத் தொடர்ந்து ஆற்காட்டார் 1996, 2001, 2006 ஆண்டுகளில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவர்களது வெற்றிக்காக அரும்பாடுபட்டவர் சோ.மா.ராமச்சந்திரன்.

இவரது துணைவியார் பெயர் அபுரூபம்மாள். இவர்களுக்கு கலா என்ற ஒரு மகள் உள்ளார்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“கலைஞர் விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

கரூர்
17.09.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திரு.சுப. சீதாராமன்

### அண்ணா விருது



**தி**ருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் திரு.சுப்பையா கோனார் திருமதி சுந்தரம்மாள் தம்பதியினரின் மகனாக 21.10.1940ல் பிறந்தவர் திரு. சுப.சீதாராமன்.

தொடக்கக் காலத்தில் அரசு ஊழியராகப் பணிபுரிந்த சுப.சீதாராமன், தமிழக அரசு ஊழியர் (என்ஜிஓ) சங்கத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பு வகித்தவர். 1980ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தன்னுடைய வேலையிலிருந்து ராஜினாமா செய்து, முழுநேரக் கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைமைக் கழக தணிக்கைக் குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்த இவர், தற்போது சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்து வருகிறார். மாவட்ட அளவில், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட அவைத்தலைவராகவும், பின்னர் நெல்லை மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

அரசுப் பணியாக, தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்குழு உறுப்பினராகவும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் திட்டக்குழு உறுப்பினராகவும், பாளையங்கோட்டை நுகர்வோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற முதன்மை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார்.

பாளையங்கோட்டை நகர்மன்றத் தலைவராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் சுப.சீதாராமன்.

என்.ஜி.ஓ. சங்கத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பு வகித்த காலத்தில் அரசு அலுவலர்களுக்கென பல கோரிக்கைகளை அரசிடம் பேசி நிறைவேற்றித் தந்தவர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்த ரகசியக் குறிப்பு முறையை நீக்குவதில் வெற்றி கண்டவர். அரசு ஊழியர்கள் இறந்தால் அவருடைய குடும்பத்தினருக்கு வேலை, நிதி ஆகியவற்றை பெற்றுத் தந்தவர்.

இவருடைய துணைவியார் பெயர் ஸ்ரீமதி. இந்த இணையருக்கு அமுதா, விஜி, சுபசுந்தரி என்ற மூன்று பெண்கள் உள்ளனர்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“அண்ணா விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

கரூர்
17.09.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நினைவில் வாழும் குளித்தலை திரு. சிவராமன்

### பாவேந்தர் விருது



**அ**ன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், இன்றைய கரூர் மாவட்டம் குளித்தலையில் திரு.அய்யாதுரை திருமதி பர்வதாம்பாள் ஆகியோரின் மகனாக 3.12.1942ல் பிறந்தவர் குளித்தலை சிவராமன். இவருடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், நான்கு தம்பிகள், ஒரு தங்கை.

தன்னுடைய இளம் வயதிலேயே அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

1971ஆம் ஆண்டு குளித்தலை நகரச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவராமன் 1986 வரை தொடர்ந்து அப்பொறுப்பில் பணியாற்றினார்.

இவருடைய தந்தை கார் ஓட்டுநர் என்பதால், இவரும் இளம் வயதில் கார் ஓட்டுநராகப் பணிபுரிந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் 1957ஆம் அண்டு போட்டியிட்டபோது, குளித்தலை சிவராமனின் தந்தை கலைஞருக்குக் காரோட்டியாக இருந்தார்.

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராகவும், 1986ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத் துணைச் செயலாளராகவும், அதன் பின்னர், கரூர் மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட விவசாய அணி செயலாளராகவும் பொறுப்பு வகித்தார்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் ஈடுபட்டு 13 சிறைவாசம் அனுபவித்தவர் குளித்தலை சிவராமன்.

குளித்தலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராக மூன்று முறை பொறுப்பு வகித்த குளித்தலை சிவராமன் அவர்கள், நஷ்டத்தில் இயங்கி வந்த வங்கியை லாபத்தில் இயங்கச் செய்ததின் மூலம் அரசு சார்பில் சிறந்த கூட்டுறவாளர் என்று பட்டம் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டவர். பின்னர், திருச்சி மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகப் பொறுப்பு வகித்தார்.

1986 முதல் 1991 வரை குளித்தலை ஒன்றிய பெருந்தலைவராகப் பொறுப்பு வகித்த காலத்தில் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் குளித்தலை சிவராமன் அவர்கள்.

2005ஆம் ஆண்டு இந்திய உணவுக் கழகத்திற்கு தமிழ்நாடு மாநில ஆலோசனைக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ‘நீதிகேட்டு நெடும் பயணத்தில்’ கலந்து கொண்டு முழுமையாக நடந்து சென்றார்.

திருமதி அகிலாம்பாள் அவர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்ற குளித்தலை சிவராமன் அவர்களுக்கு சி.சீனிவாசன், சி.முத்துவேல் என்ற இரண்டு மகன்களும், தெய்வானை என்ற மகளும் உள்ளனர்.

நினைவில் வாழும் திரு. குளித்தலை சிவராமனின் கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2025), கரூர், கோடங்கிப்பட்டி, கரூர் பைபாஸ் சாலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“பாவேந்தர் விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

கரூர்
17.09.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**